சுருக்கம்

மருந்து கட்டுப்பாடு இயக்ககம் – மருந்து கட்டுப்பாடு உதவி இயக்குநர், நடமாடும் குழு, மதுரை அலுவலகத்திற்கு புதிய தொலைபேசி இணைப்பு மற்றும் இண்டர்நெட் இணைப்பு வழங்க அனுமதித்து ஆணை வெளியிடப்படுகிறது

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ட்டி1) துறை

அரசாணை(நிலை) எண்.92 நாள். 25.03.2015

ஜய, பங்குனி 11,

திருவள்ளுவர் ஆண்டு 2046,

படிக்க:

1. அரசு ஆணை எண்.1021, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள்.15.07.1993.
2. அரசு ஆணை எண்.1326, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்( G)துறை, நாள்.18.12.2012.
3. அரசு ஆணை (D) எண்.1133, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(G) துறை, நாள்.30.10.2014.
4. மருந்து கட்டுப்பாடு இயக்குநர் (பொ), மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகம், சென்னை–6 அவர்களின் கடித எண்.8368/கணக்கு.1/2014, நாள்.21.11.2014.

*****

ஆணை:

மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் உதவி மருந்து கட்டுப்பாடு இயக்குநர், நடமாடும் குழு, மதுரை அலுவலகம் மற்றும் அவ்வலுவலகத்திற்கு கீழ்க்கண்ட பதவிகளைத் தோற்றுவித்து அரசாணை வெளியிடப்பட்டது.

| வரிசை எண். | பதவியின் பெயர் | பதவியின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | உதவி மருந்து கட்டுப்பாடு இயக்குநர் | 1 |
| 2 | மருந்து ஆய்வாளர் | 4 |
| 3 | உதவியாளர் | 1 |
| 4 | இளநிலை உதவியாளர் | 1 |
| 5 | ஓட்டுநர் | 1 |
| 6 | அலுவலக உதவியாளர் | 1 |

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் மருந்து கட்டுப்பாடு துறையில் உள்ள மருந்து கட்டுப்பாடு உதவி இயக்குநர் மற்றும் மருந்து ஆய்வாளர்கள் அனைவருக்கும் அலைபேசி (Cell Phone) உபயோகித்துக் கொள்ள அனுமதியும்

அதற்கான மாத கட்டணம் உச்சவரம்பு நிர்ணயம் செய்தும் ஆணை வெளியிடப்பட்டது. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் உதவி மருந்து கட்டுப்பாடு இயக்குநர், நடமாடும் குழு, மதுரை அலுவலகத்திற்கு தொலைபேசி கட்டணங்கள் / அலைப்பேசி கட்டணங்கள் குறித்து 2014-15க்கான கூடுதல் செலவினத்திற்கு ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட மருந்து கட்டுப்பாட்டு இயக்குநரின் கடிதத்தில் 2009-2010ல் இருந்த நிர்வாக காரணங்களினால் மதுரை உதவி மருந்து கட்டுப்பாடு இயக்குநர், (நடமாடும் குழு) அலுவலகம், மதுரை, உதவி மருந்து கட்டுப்பாடு இயக்குநர், மதுரை மண்டல அலுவலக வளாகத்துக்குள் நடத்தப்பட்டு வந்தமையால், அலுவலக சில்லறை மற்றும் ஏனைய செலவினங்களுக்கு நிதி ஒதுக்கீடு கோரப்படவில்லை என்றும் 12.09.2012 முதல் இயக்குநரது அறிவுரைப்படி, மதுரை மண்டலத்தில் நடமாடும் குழுவின் ஆய்வு மிக அவசியம் எனக் கருதி, நடமாடும் குழு தனி அலுவலகமாக நடைபெற வேண்டும் என்று கருதியதால், மேற்படி அலுவலகம் தனியார் கட்டிடத்தில் இயங்க அனுமதி வழங்கப்பட்டு, நாளது தேதி வரை இயங்கி வருகிறது என்றும், மேலும் உதவி இயக்குநர் மருந்து கட்டுப்பாடு, (நடமாடும் குழு) மதுரை அலுவலகத்திற்கு தொலைபேசி மற்றும் இணைய தள வசதி ஏற்படுத்தப்படவில்லை என்றும், அவ்வலுவலகத்திலிருந்து மருந்து கட்டுப்பாடு இயக்குநரகத்திற்கு மின்னஞ்சல் மூலமாக தினந்தோறும் தகவல்கள் அனுப்பவும் சம்பளப் பட்டியல்கள் இணையதளம் மூலமாக சமர்ப்பிக்கவும் அந்த அலுவலகத்திற்கு தொலைபேசி மற்றும் இணைய தள வசதி அத்தியாவசியமாகிறது என்றும் தெரிவித்து உதவி மருந்து கட்டுப்பாடு இயக்குநர், (நடமாடும் குழு) மதுரை அலுவகைத்திற்கு தொலைபேசி இணைப்பு மற்றும் இணையதள வசதி பெற அனுமதி வழங்குமாறு, மருந்து கட்டுபாடு இயக்குநர் (பொறுப்பு) அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மருந்து கட்டுப்பாடு இயக்குநர் (பொ) அவர்களின் கருத்துருவை கவனமாகப் பரிசீலித்து அதனை ஏற்று, உதவி இயக்குநர், மருந்து கட்டுப்பாடு, நடமாடும் குழு, மதுரை அலுவலகத்திற்கு தொலைபேசி இணைப்பு மற்றும் இணையதள வசதி பெற அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.13800/H-1/15, நாள். 17.03.2015ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஜெ.ராதாகிருஷ்ணன்**
அரசு செயலாளர்

பெறுநர்:
மருந்து கட்டுபாடு இயக்குநர்(பொ),சென்னை – 6
கணக்கு மற்றும் சம்பளம் அலுவலர்,சென்னை – 9 /18/35
மாநில கணக்கு அலுவலர், சென்னை-9/18
நிதி(சுகாதாரம்.2/பொது.2) துறை,சென்னை-9
மருந்த கட்டுப்பாட்டு உதவி இயக்குநர்,நடமாடும் குழு, மதுரை – 20
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(டேட்டா செல்) துறை,சென்னை –9
இருப்பு கோபு / உபரி

**(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)**

பிரிவு அலுவலர்